*கவனிக்க.- 2019.01.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2106 - 2019 ජනවාරි මස 11 වැනි සිකුරාදා - 2019.01.11

*2106 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 60 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 67 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2019, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, சனவரி மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


59 - B81485 - 5,403 (2019/ 01)

# பதவிகள் - வெற்றிடம்

## திவுலபிடிய பிரதேச சபை

### மேல் மாகாண அரசாங்க சேவை பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

திவுலபிடிய பிரதேச சபையில் நிலவிவரும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக மேல் மாகாணத்தைச் சேர்ந்த தகைமைகளைக் கொண்ட நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொதுவான தகைமைகள் :**

பணி/கள மேற்பார்வையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டியதோடு ஏனைய பதவிகளுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
2. நல்ல உடல், உளவலமுடையவராக இருத்தல் வேண்டும் ;
3. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி ஆகும் போது மேல் மாகாணத்தில் 03 வருடங்கள் நிரந்தர வதிவாளராக இருக்க வேண்டும் ;
4. குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டவராக அல்லது அரச அல்லது உள்ளூராட்சி சேவையில் இருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தலாகாது;
5. வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள திகதி ஆகும் போது தேவையான தகைமைகள் யாவற்றையும் பெற்றிருக்க வேண்டும்.

| பதவிப் பெயர் | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|
| 01. Work/ field Supervisor *(open recruitment)* Only for male applicants | 01 | MN-1-2016<br>ரூபா 27,140 - 10 X 300 - 11 X 350 - 10 X 495 - 10 X 660- ரூபா 45,540<br>(அ. நிரு. சு 3/2016 அட்டவணை II பிரகாரம் அடிப்படை சம்பளம் ரூ. 15, 924/- ஆகும்.) | Passing six subjects of General Certificate of examination (Ordinary Level) with Sinhala/ Tamil/ English language, maths and two (02) credit passes for any other subjects<br>&<br>Passing at least one subject of General Certificate of examination (Advanced Level) (except general test) |
| 02. காவலர்/ (அலுவலக ஊழியர் சேவை II (KKS II) Only for male applicants | 01 | PL-1-2016<br>ரூபா 24,250 - 10 X 250 - 10 X 270 - 10 X 300 - 12 X 330- ரூபா 36,410<br>(அ. நிரு. சு 3/2016 அட்டவணை II பிரகாரம் அடிப்படை சம்பளம் ரூ. 14, 234/- ஆகும்.) | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வாறு சித்தி 02 உடன் 6 பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும். அவற்றில் 5 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 03. வேலை/கள ஊழியர் (அலுவலக ஊழியர் சேவை III) Both male & female applicants | 07 | PL-1-2016<br>ரூபா 24,250 - 10 X 250 - 10 X 270 - 10 X 300 - 12 X 330- ரூபா 36,410<br>(அ. நிரு. சு 3/2016 அட்டவணை II பிரகாரம் அடிப்படை சம்பளம் ரூ. 14, 234/- ஆகும்.) | 8 ஆம் தர சித்தி, 9 ஆம் தர சித்தி |
| 04. சுகாதார ஊழியர் (அலுவலக ஊழியர் சேவை III) Both male & female applicants | 05 | PL-1-2016<br>ரூபா 24,250 - 10 X 250 - 10 X 270 - 10 X 300 - 12 X 330- ரூபா 36,410<br>(அ. நிரு. சு 3/2016 அட்டவணை II பிரகாரம் அடிப்படை சம்பளம் ரூ. 14, 234/- ஆகும்.) | 8 ஆம் தர சித்தி, 9 ஆம் தர சித்தி |

**ஆட்சேர்ப்பு முறை :**

பணிக்கள மேற்பார்வையாளர் பதவிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்து மூலப் பரீட்சை ஒன்றும் மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

| பாடங்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| பொது உளச் சார்பு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% |
| அன்றாட நிகழ்வுகள் பற்றிய சாதாரண அறிவு | 100 | 40% |

குறிப்பு : புள்ளிகளின் அடிப்படையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் ஒழுங்கிற்கேற்ப வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

- காவலர் பதவி தொடர்பில் பின்வரும் கட்டமைப்புடைய நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் தொடர் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்தளவு புள்ளிகள் |
|---|---|---|
| ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அடிப்படை கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாகவுள்ள கல்வித் தகைமைகள் | 20 | |
| சர்வதேச மற்றும் தேசிய மட்டத்திலான தற்கால நிகழ்வுகள் பற்றிய பொது அறிவு | 75 | 50% |
| ஆளுமை | 05 | |

- வேலை/கள மற்றும் சுகாதார ஊழியர் பதவி தொடர்பில் பின்வரும் கட்டமைப்புடைய நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் தொடர் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்தளவு புள்ளிகள் |
|---|---|---|
| மாகாண நிறுவனமொன்றில் அமய, பதில், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்துள்ள காலம் (வருடத்துக்கு 05 புள்ளிகள் வீதம்) | 15 | |
| பதவி தொடர்பாக பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் பற்றிய வேறு சான்றிதழ்கள் | 05 | 50% |
| சர்வதேச மற்றும் தேசிய மட்டத்திலான தற்கால நிகழ்வுகள் பற்றிய பொது அறிவு | 75 | |
| ஆளுமை | 05 | |

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துள்ளதுமாகும். விதவைகள், அனாதைகள்/விதுரர்கள், அநாதைகள் நிதியத்துக்குப் பங்களிப்பு வழங்க வேண்டும்.

(ii) நியமனம் 03 வருட தகுதிகாணலுக்கு உட்படுத்தப்படும்.

(iii) குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையின்றி நிபந்தனைகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அடிக்கடி விதிக்கப்படும் வேறு நிபந்தனைகள், உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய கட்டளைச் சட்டங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் திவுலபிட்டிய பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு இணங்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முறை :**

இங்கு காணப்படும் மாதிரி விண்ணப்பத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து "செயலாளர், திவுலபிட்டிய பிரதேச சபை, மீரிகம வீதி, தூனகஹ" என்ற முகவரிக்கு 2019.01.31 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேற் பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் விண்ணப்பங்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கும் அடிப்படைத் தகைமைகள் அற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதியொன்று ;
(iv) கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(v) விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான தொழிற்திறன்கள்/நிபுணத்துவ சான்றிதழ் ;
(vi) நற்குண சான்றிதழ்கள் இரண்டு (அண்மையில் பெறப்பட்ட)

குறிப்பிட்ட விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின் அல்லது இடையில் நியமனம் வழங்குவதனை காலதாமதம் செய்தல், மாற்றுதல் அல்லது அறிவித்தலை இரத்துச் செய்யும் அதிகாரங்கள் திவுலபிட்டிய பிரதேச சபையின் செயலாளருக்கே உண்டு.

தேவையான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

கே. ஏ. உபுல் ரஞ்ஜித்,
செயலாளர்.

பிரதேச சபை தலைமை அலுவலகம்,
திவுலபிட்டிய,
2018, திசெம்பர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திவுலபிடிய பிரதேச சபை**

**மேல் மாகாண அரசாங்க சேவையில் ............................................................ பதவிக்கான விண்ணப்பம் - 2018**

1. முழுப் பெயர் : ..........................................................................................................................

2. நிரந்தர வதிவிட முகவரி : ..........................................................................................................

3. கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் : ..........................................................................................

4. பிறந்த திகதி : ஆண்டு .......................... மாதம் :- ..............................திகதி :- ................................

5. 2019.01.31 ஆந் திகதியின் போது வயது : வருடங்கள் ................. மாதங்கள் :- .................நாட்கள் :- .................

6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ...........................................................................

7. நிரந்தரமாக வதியும் மாவட்டம் : ...........................................................................

8. கல்வித் தகைமைகள் : ..........................................................................................................

வருடம் ....................................... பரீட்சை சுட்டெண் ........................................

9. வேறு தகைமைகள் : ..........................................................................................................

10. தொழிற் தகைமைகள் : ..........................................................................................................

11. பதவித் தகைமைகள் : ..........................................................................................................

12. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................................

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். முன்வைக்கப்படும் ஏதேனும் ஒரு விபரம் பொய்யானதென நியமனம் வழங்கப்படுவதற்கு முன் உறுதிப்படுத்தப்படுமாயின் நான் தகுதியற்றவராக கருதுவதற்கும், நியமனம் வழங்கப்பட்ட பின் அவ்வாறு உறுதிப்படுத்தப்படுமாயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாகுவேன் என்பதனை அறிவேன்.

.................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : .................................

ஏற்கனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

மேலேயுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியான ............................................... அவர்கள் இத்திணைக்களத்தில் / இந்நிறுவனத்தில் ................................................................ ஆக சேவையாற்றுகின்றார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் இச்சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த விதத்திலும் அல்லது ஒழுக்காற்று தண்டனைகளுக்கு (எச்சரிக்கை விடுத்தல் தவிர்ந்த) உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப் படிவத்தினையும் பரிந்துரை செய்கின்றேன்.

.................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி : .................................

## மஹவ பிரதேச சபை

*வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் உள்ளூராட்சி பணிக் குழுவில், கீழ்க் காணப்படும் பதவிகளுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்காக மஹவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் நிரந்தரமாக குடியிருக்கும், அந்தந்த பதவிகளுக்கு முன்னிலையில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்களிடமிருந்து 2019.01.31 ஆந் திகதி வரை விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.*

| | பதவிப் பெயர் | சேர்க்கப்படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் மாதாந்த |
|---|---|---|---|---|
| 1 | துறை தொழிலாளி | ஆரம்பத் தேர்ச்சியற்ற | 06 | 03/ 2016 PL- 1<br>ரூபா 24,250 - 10X250 - 10X270<br>10X300 - 12X330 - ரூபா 36,410 |
| 2 | நீர்க் குழாய்த் தொழிலாளி | ஆரம்பத் தேர்ச்சியற்ற | 01 | 03/ 2016 PL- 1<br>ரூபா 24,250 - 10X250 - 10X270<br>10X300 - 12X330 - ரூபா 36,410 |
| 3 | நீர்த் தொழிலாளி | ஆரம்பத் தேர்ச்சியற்ற | 01 | 03/ 2016 PL- 1<br>ரூபா 24,250 - 10X250 - 10X270<br>10X300 - 12X330 - ரூபா 36,410 |
| 4 | குழாய்க் கிணறு இயக்குபவர் | ஆரம்பத் தேர்ச்சியற்ற | 01 | 03/ 2016 PL- 1<br>ரூபா 24,250 - 10X250 - 10X270<br>10X300 - 12X330 - ரூபா 36,410 |

**02. தேவையான கல்வித் தகைமைகள் (எல்லா பதவிகளுக்காகவும்)**

(அ) க. பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்புப் பாடம் தவிர்த்து)

(ஆ) இந்த ஆட்சேர்ப்பு படிமுறைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியாகும் போது இந்த தேர்ச்சியற்ற பதவிகளுக்காக அமய/தற்காலிக/ஒப்பந்த சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட படிமுறை திட்டத்திற்கு அமைவாக கல்வித் தகைமை உரித்தாகும்.

**தொழில் தகைமைகள் : (குழாய் நீர்த் தொழில்நுட்ப பதவிக்காக)**

(i) அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது தேசிய பயிலுநர் சபையில் அல்லது தொழில் பயிற்சி அதிகார சபையில் அல்லது நீர்க் குழாய் பொருத்துகை தொழில்நுட்பம் பற்றி மூன்று மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பயிற்சிச் செயலமர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட செயலமர்வு இடைக்காலமாகின் பூரண செயலமர்வு காலம் 06 மாதத்திற்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

(ii) குழாய் நீர் பொருத்துகை தொழில்நுட்பவியலாளர் பற்றிய ஆகக் கூடியது 03 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும். (இவ் அனுபவத்திற்கு உரிய சான்றிதழ் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப் பட்டதாக இருத்தல் வேண்டும்.) உள்ளூராட்சித் திணைக்களத்தில் நீர்க் குழாய் பொருத்துகை நடவடிக்கைகளில் 03 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் ஈடுபட்டிருந்தது பற்றி உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத் தலைவரினால் வழங்கப்படும் சான்றிதழினை சமர்ப்பித்தல் வேண்டும். வெளி விண்ணப்பதாரிகளாயின் அனுபவம் (3 ஆண்டுகள்) பற்றி சான்றிதழ் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்படுகின்ற தனியார் நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(iii) எல்லா பதவிகளுக்காகவும் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**04. வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) நல்லொழுக்கமும் ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

(iv) விண்ணப்பப்பத்திரம் பொறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு மஹவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 03 ஆண்டுகள் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும். (குடியிருப்பு பற்றி உரிய பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழானது பிரதேச செயலாளரின் மேலொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

(v) விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள் இவ் ஆட்சேர்ப்பு காலதாமதப்படுத்தல் அல்லது இவ் அறிவித்தலினை இரத்துச் செய்வதற்கு அல்லது திருத்துவதற்கான அதிகாரம் மஹவ பிரதேச சபை செயலாளருக்குரியதாகும்.

**05. விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய முறை :**

எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவப்படி விண்ணப்பப்படிவத்தை 2019.01.31 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு "செயலாளர், பிரதேச சபை, மஹவ" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவம் இடப்படுகின்ற கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "................................." பதவிக்கான விண்ணப்பப்படிவம் என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் :**

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் /தொழில் அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ் ;
(iii) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி ஒன்று ;
(iv) கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(v) தற்போது இவ் நிறுவனத்தில் சேவையில் உள்ளவராயின் சேவைச் சான்றிதழ் ;
(vi) அண்மையில் பெற்றுக் கொண்ட இரண்டு நல்லொழுக்கச் சான்றிதழ்கள் ;

எச். எம். எம். பீ. ஹேரத்,
செயலாளர்,
மஹவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மஹவ,
2018, திசெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

.................................................................. பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ..........................................................................

2. நிரந்தர முகவரி : ..........................................................................................

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

4. பால் :(ஆண்/பெண்) : ..........................................................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு : ............... மாதம் : ..................... திகதி : .....................

6. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ............... மாதங்கள் : ..................... நாட்கள் : .....................

7. கல்வித் தகைமை - :(சான்றிதழ்களின் புகைப்பட பிரதியினை இணைக்கவும்)

க. பொ. த. (சா. த) ப் பரீட்சை : சுட்டெண் : ........................... தோற்றிய ஆண்டு : ...........................

| இல. | பாடம் | தரம் | இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்று நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : .................................

தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ................................................................ தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ................................................................ ஆக சேவையாற்றுகின்றார். இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் எவ்வித தண்டனைகளுக்கும் ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உட்பட இல்லை என்றும் உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

.................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .................................

பதவி : .................................

(பதவி முத்திரை)

திகதி : .................................

01 - 297

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

*அபிவிருத்திச் செய்யப்படாத காணிகள் தொடர்பில் வரிப்பணம் விதித்தல் - 2019*

*இலங்கை சட்ட அமுலாக்கல் கோவையின் 252 ஆம் பிரிவு ஆக உள்ள மாநகர சபை நிலையியற் கட்டளைச் சட்டத்தின் 247 (இ) ஆம் பிரிவின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையானது 2019 ஆண்டுக்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரிப்பணம் விதிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் காணி அல்லது கட்டிடம் நிர்மாணத்துக்குப் பொருத்தம் எனக் கருதப்படுமாயின் அல்லது நிலையான விவசாய நிலமாகவோ அல்லது விட்டுவிட்டு விவசாயம் செய்யும் காணியாகவோ அல்லது குறித்த இடம் விருத்தி செய்யக்கூடிய இடமாக மாநகர சபை கருதுமாயின் :-*

*(அ) குறித்த காணியில் கட்டிடங்கள் ஏதும் இல்லாதிருப்பின்.*

*(ஆ) குறித்த காணியில் கட்டிடங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவானது, நிலத்தின் மொத்தப் பரப்பளவில் எவ்விகிதத்தைக் கொண்டுள்ளது என்பதைக் கணக்கிட்டு, அவ்விகிதமானது மாநகர சபையினால் அனுமதிக்கப்பட்ட விகிதத்துக்குக் குறைவாக இருப்பின் அல்லது.*

*(இ) குறித்த காணியானது நிலையான அல்லது தொடர்ச்சியற்ற முறையில் விவசாயம் செய்யப்படாத காணியாக இருப்பின், மூலதன மதிப்பீட்டின் பிரகாரம் பின்வரும் வகையில் வரிப்பணம் விதிக்கப்படும்.*

| | |
|---|---|
| *(1) பர்ச்சஸ் 06 க்குக் குறைவான காணியில் 2000 சதுர அடி அளவான வீடொன்றை நிர்மாணிக்க முடியுமாக இருப்பினும் அவ்வாறு நிர்மாணிக்கப்படாமல் இருப்பின் குறித்த காணியின் முதலீட்டுப் பெறுமதியில்* | *0.5%* |
| *(2) பேர்ச்சஸ் 06 முதல் 10 வரையான நிலப்பகுதிக்குள் 3000 சதுர அடிக்குக் குறைவான பரப்பளவு கொண்ட கட்டிடமொன்று இல்லாதவிடத்து சொத்தின் மூலதனப் பெறுமதியில்* | *01%* |
| *(3) பேர்ச்சஸ் 10 க்கு மேற்பட்ட நிலப்பரப்பில் கட்டிடமொன்று நிர்மாணிக்க முடியுமாக இருந்தும் அது இல்லாதவிடத்து சொத்தின் மூலதனப் பெறுமதியில்* | *1.5%* |

*மேலே சொல்லப்பட்டுள்ள 1 மற்றும் 2 ஆம் விடயங்கள் உறுதிப்படுத்தப்படாதவிடத்து சொத்தின் மூலதனப் பெறுமதியில் 2% வரிப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.*

*(சட்டத்தரணி) மதுர விதானகே*
*மாநகர முதல்வர்,*
*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.*

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அலுவலகம்,*
*ராஜகிரிய,*
*2018, நவெம்பர் 07.*

*1-249/1*

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

*வரிப்பணம் விதிப்பு - 2019*

*1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மாநகர சபை நிலையியல் சட்டத்தின் 230(1) ஆம் பிரிவின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் கீழ்வரும் முன்மொழிவுகள் பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கபட்டுள்ளன என்பதை தருகின்றேன்.*

*(சட்டத்தரணி) மதுர விதானகே*
*மாநகர முதல்வர்,*
*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.*

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அலுவலகம்,*
*ராஜகிரிய,*
*2018, நவெம்பர் 07.*

### *தீர்மானம்*

*1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலையியற் சட்டத்தின் 252 ஆம் இலக்க அதிகாரம் 230 (1) ஆம் பிரிவின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை பிரதேச அதிகார எல்லைக்குள் அமையப் பெற்றுள்ள எல்லா வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மீது 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையை 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுல்படுத்தவும்,*

*குறித்த மதிப்பீட்டின் அடிப்படையில் 1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மாநகர சபை நிலையியற் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வீடு மற்றும் காணிச் சொத்துக்களுக்கு குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் பெறுமதியில் 07 %, மற்றும் காணி, கட்டிடமல்லாத ஏனைய சொத்துக்களுக்கு அதன் ஆண்டு மதிப்பீட்டின் பெறுமதியில் 21 % 2019 ஆண்டு முதல் வரிப்பணமாக அறவிட ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*மொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்ட வரிப்பணத்தை நான்கு தவணைகளில் பின்வரும் அடிப்டையில் செலுத்தலாம் , அதாவது 2019 ஆண்டின் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுக்கு முன்பாக வரிப்பணத்தின் தவணைகளுக்கான கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். தவணைக்கட்டணத்தின் கடைசித் திகதிகள் விடுமுறையாக அமைந்துவிடின் வரும் கிழமையில் வேலை நாட்களில் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும். மேலும் 1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மாநகர சபை நிலையியற் சட்டத்தின் (திருத்தப்பட்ட) மற்றும் சரத்து இலக்கம் 230 மற்றும் 256 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் அடிப்படையில் 2019 ஆண்டுக்காக செலுத்தப்பட வேண்டிய வரிப்பணம் கீழ்வரும் அடிப்படையில் பூரணமாகவோ அல்லது தவணை அடிப்படையில் செலுத்தி முடிக்கப்பட்டிருப்பின் அதற்கான கழிவுத் தொகை பின்வருமாறு அமையும் :-*

*பூரணமாகவோ அல்லது தவணை அடிப்படையில் செலுத்தி முடிக்கப்பட்டிருப்பின் அதற்கான கழிவுத் தொகை பின்வருமாறு அமையும் :-*

*(1) 2019, சனவரி 31 ஆந் திகதிக்கு முன்பாகவோ அல்லது குறித்த திகதியில் முழு ஆண்டுக்கும் மதிப்பிடப்பட்ட வரிப்பணத்தினை முழுமையாகச் செலுத்தினால் குறித்த தொகையில் 10% கழிவாகப் பெற்றுக் கொள்ளலாம்*

*(2) மதிப்பிடப்பட்ட தொகையை தவணை அடிப்படையில் குறித்த திகதிக்கு முன்பாகவோ அல்லது குறித்த திகதியில் செலுத்தி முடிக்கப்படின், மொத்தமாக செலுத்தப்பட வேண்டிய வரிப்பணத்தில் 5% கழிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.*

*வரிப்பணம் குறித்த திகதியில் அல்லது குறித்த தவணைக்குள் செலுத்த முடியாது போனால் பின்வரும் அடிப்படையில் தண்டப்பணம் (முழு வரிப்பணத்தில் வீதமாக) அறவிடப்படும்.*

- *தரிசு நிலம் மற்றும் வசிப்பிடங்கள் - 15%*
- *தரிசு நிலம் மற்றும் வசிப்பிடமற்ற கட்டிடங்கள் - 20%*

*2019 ஆம் ஆண்டுக்கான சொத்து மதிப்பீடு தொடர்பான அறிவித்தல்கள் 31.01.2019 ஆந் திகதி முன்பாக மாநகர எல்லைக்குள் உள்ள அனைத்து வரி செலுத்துநர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுவதுடன் அவ்வாறு அறிவித்தல்கள் கிடைக்கத் தாமதமானாலோ அல்லது கிடைக்காமல் விட்டாலோ, செலுத்தப்பட வேண்டிய வரிப்பணம் தொடர்பான விபரங்களை மாநகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் குறித்த வரிப்பணத்தை செலுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடங்களுக்காகச் செலுத்தப் பட வேண்டிய வரிப்பணத்தில் ஏதும் மீதங்கள் அதைச் செலுத்திவிட்டு 2019 ஆம் ஆண்டுக்காகச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தைச் செலுத்தலாம்.*

*குறித்த சொத்து மதிப்பீடு தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் இருப்பின், அறிவித்தல் கிடைக்கப் பெற்று 30 நாட்களுக்குள் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இக்குறித்த காலப்பகுதிக்குள் வரிப்பணம் செலுத்தப்படாமல் இருப்பின் தண்டப்பணம் செலுத்த வேண்டியேற்படும் என்பதை அறியத் தருகின்றோம்.*

*மேலும் உங்கள் வரிப்பணத்தினை இணையத்தளத்தின் ஊடாகவும் கொடுப்பனவு செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்தியுள்ளோம். www.elgservices@gov.lk என்ற இணையத்தளத்தினை நாடுவதன் ஊடாக இவ்வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.*

*1 – 249/2*

---

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை**

*மதிப்பீட்டுப் பதிவை பரீட்சித்தல் – 2019*

*2019 ஆம் ஆண்டுக்காக மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வரிப்பண மதிப்பீட்டுப் பதிவுகளை சாதாரண வேலை நாட்களில் வரி செலுத்துனர்கள் பரீட்சிப்பதற்கான வசதிகளை மாநகர சபை அலுவலகம் வழங்கத் தயாராகவுள்ளது என்பதை மாநகர சபை நிலையியற் கட்டளைச் சட்டத்தின் 252 பிரிவின் 235 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத் தருகின்றேன்*

*(சட்டத்தரணி) மதுர விதானகே*
*மாநகர முதல்வர்,*
*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.*

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அலுவலகம்,*
*ராஜகிரிய,*
*2018, நவெம்பர் 07.*

*1–249/3*

---

**மாத்தறை மாநகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உரிதிப்பத்திரம் வழங்கும் சட்டம் – 2019*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2019 ஆம் ஆண்டிற்கான உரிதிப்பத்திரம் வெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உரிதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் "ஆ" அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.*

*இந்த சங்கங்களுக்கு அருகாமையிலே, குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலோ வசியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு*

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.

சேனக பல்லியகுருகே,
மாநகர சபை ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2018, சனவரி 01.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சங்கத் தலைவரை முகாமையாளர் செயலாளர் | சங்கத்தின் பெயர் | சங்கம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. சுனில் மொஹொட்டி | செயலாளர் | மாத்தறை விளையாட்டு சங்கம் | இல. 9/ஏ, உயன் வத்த, மாத்தறை |
| 2. ஜே. எச். தகம்சிறி | செயலாளர் | ருகுனு விளையாட்டு சங்கம் | கூட்டுறவு இல்லம், புகையிரத வீதி, மாத்தறை |

1 - 437

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.